தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி IV. } ரௌத்ரிஸு ஆவணிமீ } பகுதி 5

தொற்றுநோய் அலைகள்.
Epidemics in Waves.

லண்டன் டைம்ஸ் பத்திரிகையின்
விசேஷ வைத்திய சாஸ்திர நிருபரின் வியாசத்தினின்றும்
ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர் B. A., B. L.,
தொகுத்தெழுதியது.

பொதுவாகக் கூறின், நோய் வாய்ப்படும் ஒருவன் அந் நோயால் தான் வருந்துவானே யன்றிப் பிறருக்குத் தீங்கு செய்யான். பிறருக்கு அவனால் உண்டாகக் கூடிய துன்பங் கள் யாவும் பிணியாளியின் கோபத்தாலும், அவன் பொருட்டுக் கண் விழித்துக் கால்பிடித்தல் முதலிய கைங்கரியங்களை அவர் செய்வதாலுமே அவருக்கு உண்டாகும். ஆனால் சிற் சில வியாதிகள் அவ்வாறின்றிப் பிணியாளியைத் தீண்டுவோர் மீதும், அவனை அணுகுவோர் மீதும், அவன் புனைந்த ஆடை யைத் தொடுவோர் மீதும் பாய்ந்து அவரைப் பற்றிப் பிணி

வாய்ப்படுத்தி வருத்துவன. இவ் வகையான விசேஷத் தீக் குணம் வாய்ந்த சிற் சில நோய்களையே தொற்றுநோய்கள் என்கிறார்கள். அவற்றுள்ளும் சிற் சில கூற்றுவனுக்கு உரிய நண்பராய்க் கோடானுகோடி ஜனங்களை அவனுடைய இருண்ட ராஜ்ஜியத்துக்கு அனுப்ப வதுவாகின்றன. அவற்றையே கொள்ளை நோய்கள் என்று கூறுகிறார்கள். வாந்தி பேதி (Cholera) வைசூரி (Small-pox) மகம்மாரி (Plague) இன்புளுவென்ஸா (Influenza) என்னுமிவை கொள்ளை நோய்களிற் சில.

நீரின் அலைகளைக் கவனித்திராதார் மிகச் சிலரே யாவர். அவை சமுத்திரம் போன்ற அகன்ற நீர்ப் பாங்குகளில் பெரியனவாயும், குளங்கள் போன்ற சிறு விடங்களில் சிறியனவாயும் காணப்படுகின்றன. அலைகள் அணி அணியாய் ஒன்றின் பின் ஒன்றாய் அடுத்துவரும் குணத்தையும், சிறிது நேரம் தோன்றிப் பிறகு மறைந்து மறுபடியும் தோன்றி மறையும் குணத்தையும் உடையன. ஒவ்வொரு அலையும் சுற்றிலுமுள்ள சமமான நீரினின்று மேல் எழுந்து உயர்ந்து ஓங்கிப் பின்பு மடிந்து விழுந்து நீர் மட்டத்தோடு மட்டமாய்ப் போய்விடுகிறது.

இவ்வாறே சாதாரணமாய் விசேஷ நிகழ்ச்சிகள் ஒன்றுமின்றி யிருக்கும் காலங்களிலே சிற் சில தொற்று வியாதிகள் அலைகள் போல் எழுந்து ஓங்கி வளர்ந்து எங்கும் பரவிப் பின்பு இருந்த இடமே தெரியாது மறைந்து போகின்றன. பின்னரும் சிற் சில காலங்களில் இவை மறுபடியும் மறுபடியும் தோன்றித் தோன்றி மறைகின்றன. இவற்றையே இங்கு தொற்றுநோய் அலைகள் என்று கூறுகிறோம். இவை சாதாரணமாய் எல்லாக்காலங்களிலும் காணப்படாத விசேஷமாய்ச்

சிற் சில காலங்களில் மட்டும் மும்மரமாகப் பரவுதலால் இவற்றை அலைகளுக்கு ஒப்பிடுவது நன்று பொருந்தும்.

தொற்று நோய்கள் எங்ஙனம் எழுகின்றன, எவ்வழி பரவுகின்றன, எக்காரணங்களால் முடிவு பெறுகின்றன என்னும் வினக்கள் நமது மனதை முற்றிலும் கவரவல்லன வெனினும், அவற்றிற்கு விடையளிப்பது எளிதான காரியமல்ல. சரியான பதிலை அளிக்க முடியாதென்றே இப்பொழுது கூறவேண்டும். ஏனெனில் நாம் கொண்ட கொள்கைகளை நிலைநிறுத்தற்குச் சாதகமாய் நாம் கண்டறிந்த விஷயங்கள் மிகச் சுவல்பமே. அவற்றினின்று நாம் ஒரு விதத் தீர்மானத்தையும் உறுதியாகக் கொள்ளுதற் கில்லை. அதுவும் தவிர, வெவ்வேறு காலங்களில் இவ் விஷயங்களைப் பற்றி வெவ்வேறு கொள்கைகள் கையாளப்பட்டு வந்திருக்கின்றன. இதுவரை உறுதியாக ஒன்றும் நிருணயிக்கப்படவில்லை.

ஆயினும் நாம் சிற்சில விஷயங்களை எடுத்துக் கூறக் கூடும். அவற்றுள் சிறிது கல்பனையே. ஆயினும் இவ்வாறு கல்பித்துக் கொள்ளும் விஷயங்கள் நாம் அறிந்தவற்றோடு ஒவ்வுவன வாதலால் அவை நம்மால் கொள்ளற்பாலன வாகின்றன. இக் கல்பனைகளோடு ஒவ்வாத விஷயங்களை நாம் இனி அறிய வருங்கால் அப்பொழுது இவற்றைச சரியன்றென்று தள்ளிவிடுவோம். அதுவரை இவற்றைச் சரியெனவே கருதி வருவோம்.

முதலாவது, ஒவ்வொருவனுக்கும் தன்னைத் தொற்றுநோய் வித்துக் களினின்று காத்துக் கொள்ள வல்ல சக்தி இயற்கையாகவே ஒரு துணை இருக்கிற தென்று அறியப்பட்டிருக்கிறது. இதை இயற்கைத் துணை வலி என்று கூறலாம். ஒவ்வொருவனும் இயற்கையாய்ப் பெற்றிருக்கும் தேகவலி

யையே இதற்கு ஒப்பாகச் சொல்லலாம். பிறகூறிய இந்த உடல் வலியின் உதவியால் ஒருவன் சாதாரணமாய்த் தனக்கு நேரும் இடையூறுகளையும் தட்டுத் தடங்கல்களையும் அகற்றி வருவது போலவே, இவ் இயற்கைத் துணைவலியின் உதவியால் அவனை இடையறாது சூழ்ந்து தாக்கும் நோய்வித்துக்களின் தொந்தரையினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளுகிறான். நோய்விளைக்கும் பாக்டீரியா வென்னும் நுண்ணுயிரினத்தால் எங்கும் நிறையப்பெற்று அழுக்குற்றிருக்கும் இவ்வுலகில் நோயற்றுத் துயரற்ற சுறு சுறுப்பான நல் வாழ்க்கை புரிதற்கு இன்றியமையாத ஓரளவு வலி நமக்கு இருப்பதால் மட்டுமே நாம் உலகை வாழ்க்கை புரிந்துவருகிறோம். அன்றேல் நாம் யாவரும் பொல்லாப் பாக்டீரியாவின் வசப்பட்டு நோயுற்று அடியோடு தொலைந்து போயிருப்போம். சாதாரணமாக உட்புருநோய் (Tuberculosis) ஈரல்சுரம் (Pneumonia) முதலிய நோய்களை விளைக்கும் நோய்வித்துக்கள் நம்மைத் தீண்டி நம்முட்புகுந்து விடுகின்றன. அப்பொழுது நம்முடைய காப்பு ஆகும் இயற்கைத் துணை வலியானது இவற்றுக்கு நாம் உள்ளாகாதவாறு நம்மைப் பாதுகாக்கின்றன. இவ்வாறு நாம் மடியாது துன்புறாது நம்மைக் காத்துவரும் இயற்கைத் துணை வலியானது ஓர் அளவுக்குக் குறைந்து போகக்கூடாது. அந்த அளவுக்குக் குறைந்தால் பாக்டீரியாவின் கை வலுக்கும், அதற்குமேல் எவ்வளவுக் கெவ்வளவு இவ்வலி அதிகமாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாம் தைரியமாய் நோயற்று வாழலாம் என்பது பொதுவான விஷயம். இந்த அளவைக் காப்பு வரம்பு (Margin of Safety) என்று கூறலாம். அதற்குக் குறைந்தால் மோசம் : கூடினால் நல்லது.

இக் காப்பு வரம்பானது எக் காலத்தும் ஒரே அளவினதாக இருப்பதில்லை, குளிராலும், பசியாலும், அச்சத்தா

லும், கவலையாலும், நோயாலும், இயற்கை விதிகளை நிராகரிப்பதாலும் இவ் வரம்பின் மட்டம் குறைந்து போகிறது. இது தாழத் தாழப் பற்பல நோய்களும் குடிகொள்ள முயல்கின்றன. வேலி உயரம் குறைந்தால் வயலுக்குச் சேதம் ஏற்படுவதுபோல இந்த வரம்பின் மட்டம் குறைந்தவுடன் உடலுக்கும் உயிருக்குமே சேதம் ஏற்பட ஆரம்பிக்கும். வலி குன்றியபோதே பகைவருக்குக் கொண்டாட்டம்.

எல்லாப் பகைவரும் இவ்வாறு பலம் குன்றியவரல்லர். சிற் சில பாக்டீரியா காப்பு வரம்பை எளிதில் மீறி இயற்கைத் துணை வலியைச் சிறிதும் பொருட்டாக்குகிறதில்லை. நல்லவேளையாக இவ்வாறு மிக வலி பொருந்திய சத்துருக்கள் எப்பொழுதும் காணப்படுகிறதில்லை. சாதாரணமாக எல்லாப் பாக்டீரியாவும் இவற்றின் அளவு வலி பெற்றிருந்தால் இரண்டில் ஒன்று நடப்பது திண்ணம்: ஒன்று, பகைவருக்குத் தோற்று மானுடவருக்கமே ஒரு குஞ்சு கூட இல்லாதபடி தொலைந்துபோகும்; அல்லது இரண்டு, மனிதரின் இயற்கைத் துணை வலி மிகுந்து காப்பு வரம்பு உயருவதால் மனித வருக்கம் இப்பொழுதிருப்பதுபோலவே பயமின்றி வாழும்.

சிற்சில காலங்களில் மிகவும் வலி பொருந்திய நோய் வித்துக்கள் உண்டாகி உலக முழுவதும் பரவி அனேகருக்கு நோய் விளைக்கின்றது. இக் காலங்களில் தான் தொற்று நோய் அலைகள் எழுவது.

எவ்வாறு இவ் வகை விசேஷ வலி பொருந்திய நோய் வித்துக்கள் உண்டாகின்றன என்பது இதுவரை உறுதியாக அறியப்படவில்லை. எனினும் இது மட்டிலும் அறியப்பட்டிருக்கிறது.

பாக்டீரியா ஒருவனைப் பற்றி அவனுடலி லிருந்து தமக்கு வேண்டிய உணவைப் பெற்று இனம் பெருகி வளருதலால் அவனது உடலைப் பொதுவாக வளர்இடம் (Host) என்று கூறலாம். விசேஷ குணம் வாய்ந்த சிற் சில பாக்டீரியா வானவை,குறிப்பிட்ட ஒருவகையாக, அநேக வளரிடங்களில் வளர்ந்து செழிக்கச் செழிக்க, அந்த பாக்டீரியா வமிசத்தின் தீக்குணம் பெரிதும் பெருகுகின்றது என்பது செயற்கையால் நன்கு நிரூபிக்கக்கூடிய விஷயம். இடையிடையே இயற்கையாகவும் இவ் வித நிகழ்ச்சிகள் எதிர்பாரா வண்ணமாக நேருகின்றன என்று எண்ணுதற்கு இடமிருக்கிறது. இதனால் உலகத்தில் சாதாரணமாய் ஏற்பட்டிருக்கும் இயற்கைத் துணை வலியைக் காட்டிலும் வலியில் மிக்க நோய்வித்துக்கள் உண்டாக்கப்படுகின்றன. இவ்வாறு வீரத்தன்மை பொருந்திய நோய்வித்தானது அதுவரை தீதற்றதெனக் கருதப்பட்டிருந்த ஓரினத்தில் தோன்றினும் தோன்றலாம். அஃது எங்கு தோன்றினும் அதன் கொடிய குணத்துக்கு ஒரு குறையுமில்லை. உருவத்திலும் அமைப்பிலும் அதன் இனத்தைச் சேர்ந்த தீதற்ற மற்ற பாக்டீரியாவை ஒத்திருப்பினும் அது குணத்தில் அவற்றினின்றும் முழுவதும் மாறுபட்டிருக்கின்றது. பூனையும் புலியும் ஒரே இனமல்லவா?

புதிதாய்த் தோன்றிய இர்தச் சனியனால் முதலில் பீடிக்கப்பட்டவர் அனேகமாய்ப் பிழைப்பதில்லை. அவர் சாவதற்குள் அவரைச் சுற்றி யுள்ள பலர் மீது சுவாசித்து அவரையும் இந் நோய் வாய்ப்படுத்துகின்றனர். அவர்களும் இது எதிர்க்கும்போது எதிர்க்கமாட்டாது எளிதில் நோயுறுகின்றனர். அவிழ்த்துவிட்ட காடி போல இந் நோய்வித்து எங்கும் சென்று பரவுகின்றது. வெகு சீக்கிரம் உலகெங்

கும் பரவிவிடுகின்றது. செல்லு மிடமெங்கும் தன் வலிமை யும் குறைந்த வலி பொருந்திய இடங்களே யாதலால் அலைதோறும் ஒவ்வோரிடத்திலும் வலி மிகுந்து எங்கும் திக்கு விஜயம் செய்து வருகின்றது.

இப்பொழுது தான் கொள்ளைநோயின் மும்மரம். லக்ஷக் கணக்காக மாந்தர் நோய்வாய்ப்படுகின்றனர். அவருள் பெரும் பாலார் பிழைக்கின்றனர், சிறு பான்மையோர் இறக்கின்ற னர். பொதுவாகக் கூறின், நோய் வாய்ப்படும்போது எவ்வ ளவுக் கெவ்வளவு ஒருவனுக்குக் காப்பு வரம்பு உயர்ந்திருக்கி ன்றதோ அவ்வளவுக் கவ்வளவு அவன் பிழைப்பது எளிதா கிறது. சாகாது பிழைத்தவர்களுள் வரவரக் காப்பு வரம்பு உயர்கின்றது. சீதோஷ்ணநிலை முதலியனவும் சௌகரிய மாக மாறினால் காப்புவரம்பு வலுத்து நோய் சிறிது அடங் கினதுபோல் தோன்றுகிறது.

இது தோற்றமேயன்றி நோய் இன்னும் முற்றிலும் மறைந்தபாடில்லை. நோயுறாது தப்பியபோதிலும், நோய் வித்தைத் தொலைக்கப் போதிய வலி யில்லாதவரிடம்நோய் வித்து இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஏற்ற குளிர் முதலிய சௌகரியங்கள் உண்டானவுடன் மறுபடியும் அது திடீரெனப் புறப்பட்டுவிடுகிறது. முன்பு தப்பிய பலர் இப் பொழுது அதற்கு இரையாகின்றனர்.

இவ்வாறே அனேக முறைகள் அலை அலையாகத் தோ ன்றி மறைகின்றது. ஆனால் தடவைக்குத் தடவை நாளு க்கு நாள் காப்பு வரம்பு உயர்ந்துகொண்டே யிருக்கிறது. அதுதான் இயற்கை விதி. தற்காப்பு என்பதை எல்லாப் பிராணிகளும் எல்லாக் காலத்திலும் பிராணதாரப் போராட் டத்தினால் பின்பற்றி வருகின்றன. ஒரு பிராணிக்குப் போ

திய அளவு தற்காப்பு இலதாயின் அப் பிராணி வேரோடு தொலைந்து போகின்றது. வரம்பு உயர்ந்துபோயினமையால் அதனால் நோய் வித்துக்கள் முன்போல எங்கும் சென்று யாவற்றையும் எதிர்த்துத் தாக்கிப் பிணியுறுத்த முடிகிறதில்லை. எதிர்ப்புக்கு எல்லாரும் ஆயத்தமாகவே இருக்கின்றனர். அதனால் நோய்வித்து முற்றிலும் முன்போல வெற்றி பெறாது சிற் சில சிறு உபத்திரவங்களை மட்டிலும் விளைவிக்கின்றது. கொப்புளங்களும், சிரங்குகளும், காது நோய்களும், நெஞ்சுச் சளி முதலிய நோய்களும் உண்டாகின்றன. இதன் கீர்த்தி படைத்த நாளெல்லாம் முடிந்து போகின்றது. மனித வருக்கம் பிராணாதாரப் போராட்டத்துக்கு வேண்டிய தற்காக்கும் ஆயுதங்களைத் தயார் செய்து இன்னுமோர் எதிர்ப்புக்கு ஆயத்தமாயிருக்கிறது.

பொதுவாக இவ்வாறு தான் நடந்தேறுகிறது. சிற்சில வேளைகளில் தற்காப்புச் சரியான்படி நடந்துவரச் சிறிது காலமாகின்றது. குளிர் முதலியன பிரதிகூலமாய் இருப்பதால் தற்காப்பு எளிதில் நடைபெறாமல் போக நேரிடுகிறது. இக் காலங்களில் விளையும் உயிர்ச்சேதத்துக்குக் கணக்கே யில்லை. மனித வருக்கமே அற்றுப்போகுமோ என்று கூட நினைக்கும் படியாகிறது. இப்பொழுது முடிவு பெற்ற மகாயுத்தத்தினிடையில் இன்புளுவென்சா தோன்றியபோது மனித வருக்கத்தினருக்கு இன்றியமையாத சௌளகரியங்கள் குறைந்திருந்ததால் தற்காப்பு முறை சரிவர நடைபெறாது போயினமையால் விளைந்த உயிர்ச் சேதம் அளவற்றது. சண்டையால் அயர்ந்திருந்தோம்; ஓயாது உழைத்துக் கவலையும் கொண்டதால் உடல் வலி குன்றியிருந்தோம்; மேன் மேலும் தாக்கும் பல கஷ்டங்களாலும் நோய்களாலும் நமது காப்பு வரம்பு மிகவும் தாழ்ந்திருந்தது. அக் காலத்தில் மிக வன்மை பொ

ருந்திய இன்புளூவென்சா நோய் வித்து வெளிக் கிளம்பியதும் அதற்கு எதிர் நிற்கும் ஆற்றல் அற்று மடிந்து போன மாந்தர் எத்தனை? சண்டைக்கு முன் இது தோன்றியிருந்தால் இத்தனை பேர் கூற்றுவன் வாய்ப்பட்டிரார் என்று துணிவாகக் கூறலாம். காப்பு வரம்பு வெகு சீக்கிரம் உயர்ந்து நோய் அப்பொழுதே அடங்கியிருக்கும்.

இப்பொழுது, தான் சண்டை நின்றதின் பிறகு, மறுபடியும் காப்புவரம்பு உயர்ந்து ஒரு வகையாக இதன் வேகம் குன்றியிருக்கிறதென்று கூறலாம். ஆயினும் இஃது இன்னும் முற்றிலும் ஒடுங்கவில்லையென்பது இன்னும் சிலர் இந் நோய் வாய்ப்பட்டு இடர்ப்பட்டும் உயிரிழந்தும் வருவதனின்று தெரியவருகிறது. ஆயினும் இந் நோயின் வன்மை குன்றிப் போய் விட்டதாகவே தோற்றுகின்றது.

கவலையின்றி, நல் உணவு உண்டு, நல் உடை உடுத்து, நற் காற்று உட்கொண்டு, நல் இடத்து இருந்து, நல் வாழ்க்கை வாழ்வதே இந் நோய் வராது தடுப்பதற்குரிய உபாயமாம். உண்மையில் எவ்வகை நோயையும் பொதுவாகத் தடுக்கவல்ல வலிய இயற்கை விதியே இது. ஆதலால் யாவரும் நன்கு வாழ்ந்து வருவார்களாக.

தேனீக்களும் அவைகளின் குடும்பங்களும்.

Bees and their Families.

சென்னைப் பிரஸிடென்ஸி கலாசாலையில்
உயிர்நூல் ஆசிரியராயிருக்கும்
ஸ்ரீமான் R. கோபால ஐயர், M.A., L.T.
எழுதியது.

ஒரு தேனடையி லிருக்கும் தேனீக்களை எல்லாம் சேர்த்து ஒருமிக்க ஒரு தேனீக் குடும்பம் என்று கூறுவோம். ஒரு குடும்பத்தில் 5,000 தேனீக்கள் முதல் 20,000 தேனீக்கள் வரை வசிக்கும். இவை யெல்லாம் ஒரே இனத்தவை யாயினும் அமைப்பிலும் குடும்ப சம்ரக்ஷணைக்காகச் செய்து வரும் தொழிலிலும் தம்முள் வித்தியாசப்படும்.

ஊழியத் தேனீ.

குடும்பங்கள் பெரும்பாலும் பெண் ஈக்களாலாகியவை என்றாலும் இவைகளுக்கு முட்டையிடும் சக்தி கிடையாது. முட்டைப் பைகளும் தேகத்தில் சரிவர உண்டாவதில்லை. இவைகளின் தொழில் குடும்ப வேலை யாவற்றையும் கவனிப்பதே. இவைகளுக்கு ஒழிவு என்பதே கிடையாது. எப்பொழுதும் குடும்பார்த்தமாகப் பாடுபட்டு அலைந்து திரியும். வேண்டிய மெழுக்கை உண்டாக்கி தேனடையைக் கட்டவும், குடும்பத்திற்கு உணவாகும் தேனைச் சேகரிக்கவும், சேர்த்த தேன் கெடாதபடி ஏற்பாடு செய்யவும், முட்டைகளி லிருந்து

வரும் புழுக்களை ஆதரிக்கவும் ஆகிய தொழில்களைச் செய்வதனால் இத் தேனீக்களுக்கு ஊழியத் தேனீக்கள் அல்லது தொழில் தேனீக்கள் என்று பெயரிடலாயிற்று.

அரசித் தேனீ.

இது ஒரு பெண் தேனீ. அடையில் சாதாரணமாக ஏக காலத்தில் ஒரு அரசித் தேனீ தான் இருக்கும். இத் தேனீ மேற் கண்ட ஊழியத் தேனீக்களை விடச்சற்று பருத்திருக்கும். உடல் உப்பி நீண்டிருக்கும். இத் தேனீயே கூட்டில் அதி முக்கியமானது. இத் தேனீயையே ஊழியத் தேனீக்களெல்லாம் மிகக் கவனமாய் இராப் பகலாய்ப் போஷித்துப் பாதுகாக்கும். இவ் அரசித் தேனீயின் வேலை ஆயிரக்கணக்கான முட்டைகள் இடுவதே. ஒரு குடும்பத்தி லிருக்கும் தேனீக்களெல்லாம் ஒரு அரசித்தேனீயின் வர்க்கமெனலாம். இது பற்றியே இத் தேனீக்கு அரசித் தேனீ என்று பெயரிட்டார்கள்.

சோம்பேறி தேனீ.

தேனடைகளில் சில ஆண் தேனீக்களு முண்டு. இவை ஊழியத் தேனீக்களை விடச் சற்று பெரியவை. கண்கள் பெரிதாயிருக்கும். இவைகள் குடும்ப சம்ரக்ஷணைக்காக யாதொரு வேலையும் செய்வதில்லை. ஊழியத் தேனீக்கள் கஷ்டப்பட்டு சேகரித்து வைக்கும் தேனையுண்டு குடும்பத்திற்கு ஒரு பெரும் பாரமாகும். இதன் முடிவைப் பற்றி பிறகு கூறுவோம். இவ் விதம் வேலை செய்யாமல் சௌக்கியமாய் உண்டு வளரும் தேனீக்களுக்கு சோம்பேறித் தேனீ என்று பெயரிட்டது மிகவும் பொருத்தமானது.

எனவே தேன் கூட்டில் முக்கியமாய் ஊழியத் தேனீக்களும் ஒரு அரசித் தேனீயும் சில ஆண் சோம்பேறித் தேனீக்களும் இருக்கும்.

தேனடை அல்லது கூடு.

இது மெழுக்கினாலாகியது. மெழுக் கென்பது ஊழியத் தேனீக்களின் அடிப் பாகத்தில் உடல் வளையங்களை இணைக்கும் மெல்லிய தோலின் வழியாய் வெளிவரும். இம் மெழுக்கைக் கால்களினால் திரட்டித் தாடைகளினால் நன்றாகப் பிசையும், தம் உடலினின்று மெழுக்கை உண்டாக்கும் சிரமமும் அதைக் கால்களினால் திரட்டிச் சரிப்படுத்தும் சிரமமும் மிகுதலால் சிரமபரிகாரம் செய்யும் பொருட்டு ஊழியத் தேனீக்கள் அடிக்கடி* வெளிச் சென்று பூக்களின் மதுக்களை வயிறு நிரம்ப உண்டு திரும்பும். திரட்டிய மெழுக்கைக் கொண்டு கூட்டைக் கட்டும். தேனடை யென்பது பல சிறு அறைகளாலாகியது. ஒவ்வொரு அறையும் ஆறு மெழுக்குச் சுவர்களாலாகியது. இவ்விதம் ஆறு சுவர் அறைகளை ஏற்படுத்துவதினால் தான் நூற்றுக் கணக்காய் அறைகள் நெருக்கமாய் ஏற்படுத்த ஏதுவாகின்றது. செலவாகும் மெழுக்கும் சிறிதும் வீண் படாமல் உபயோகப் படுகின்றது. சுவர்கள் சிறிதும் கோணல் இல்லாமலும், ஒரே தடிமனுயு மிருக்கும். அறைகள் அடையின் இரு புறத்திலும் அமைக்கப்படும். ஒரு தேனடை ஒன்றரை அங்குலம் தடிமன் வரைக்கு மிருக்கலாம். இவ் விதமாகிய தேனடை ஒரு மரப் பொந்திலாவது, கிளையிலாவது தேனீக்கள் தாராளமாக வந்து போகும்படி தொங்கவிடப்படும்.

குடும்ப ஆரம்பம்.

ஊழியத் தேனீக்கள் அறைகளைக் கட்டிக் கொண்டுவரும் போதே அரசித் தேனீ ஒவ்வொரு அறை யுள்ளும் சென்று ஒரு முட்டை யிட்டு வெளி வரும். ஒரு அரசித் தேனீ தான் இறக்கு முன் பதுலக்ஷம் முட்டைகள் வரைக்கும் இடும். முட்டைகள் இடப்பட்ட வுடன் அவைகளைப் பாது காப்பதும்

ஊழியத் தேனீக்களின் தொழிலாகும். சில நாட்களுக்குப் பிறகு முட்டைகள் வெடித்து ஒவ்வொன்றி னின்றும் கண்க ளில்லாத செய லற்ற புழு வெளியாகும். இப் புழுக்கள் வெளி வந்த வுடனே ஊழியத் தேனீக்கள் இவைக ளிருக்கும் அறைகளைத் தேனால் நிரப்பப் புழுக்கள் தேனை யுண்டு அதி வேகமாக வளரும். தேன் என்பது ஊழியத் தேனீக்கள் பூக்களிளின்று உறிஞ்சித் தமது உணவுக் குழாயின் முதல் பாகமாகிய க்ராப் (Crop) என்ற பையில் கொணர்ந்து மறுபடி யும் வெளியே உமியும் மதுவே. (ஆனால் மதுவிற்கும் தேனுக் கும் சிற் சில பேதங்கள் உண்டு. அதை இவ்விடம் கூற வேண்டியது அவசிய மில்லை). மேற்கண்டபடி புழுக்க ளிருக்கும் அறைகளை நிரப்பித் தேன் புளிக்காதபடி சிறிது விஷப் பொரு ளைக் கலந்து ஒவ்வொரு அறையையும் மெழுக்குக் கதவுகளால் மூடும்.

அறைகளின் உள்ளிருக்கும் தேனீப் புழுக்கள் தேனை யுண்டு வளர்ந்து உறங்கும் குழந்தைகளாக மாறி, பிறகு சில நாட்களில் ஊழியத் தேனீக்களாக மாறி, அறைகளின் கத வைத் திறந்து வெளிவரும். வெளிவந்தவுடன் சிறிதும் தாமதி யாமல் அங்கு மிங்கு மோடி அடையைச் சுத்தம் செய்தும், புழுக்களைக் கவனித்துச் சில நாட்கள் கழித்த பிறகு மற்ற ஊழியத் தேனீக்களுடன் வெளிச் சென்று மதுக்களைத் தாமும் உண்டு கூட்டுக்குவேண்டிய தேனைச் சேகரிக்கவும ஆரம் பிக்கும்.

இவ்விதம் கூட்டி லுள்ள ஊழியத் தேனீக்களின் தொகை அதிகரித்த வுடன் ஊழியத் தேனீக்கள் சாதாரண அறைகள் கட்டுவதை நிறுத்திச் சற்றுப் பெரிதான சில அறைகளைக் கட்டும். இவைகளி லுள்ளும் அரசித் தேனீ.

சென்று சில பெரிய அறைகளில் ஒரு வித முட்டையும் இன்னும் சில மிகப் பெரிய அறைகளில் ஊழியத்தேனீ முட்டைகளை யொத்த முட்டைகளும் இடும். முற்கூறிய முட்டைகளினின்று ஆணுகிய சில சோம்பேறித் தேனீக்களும், பிற் கூறிய முட்டைகளி னின்று அரசித் தேனீக்களும் வெளிவரும்.

அரசித்தேனீ சாதாரணமாக இடும் முட்டைகளி னின்று ஊழியத் தேனீக்கள் உண்டாகும். இம் முட்டைகள் ஒவ்வொன்றும் அரசித் தேனீயின் உடலி லுள்ள அண்டப் பையிலிருந்து வெளிவரும்போது, ஏற்கனவே சோம்பேறித் தேனியோடு ஏற்பட்டிருக்கும் புணர்ச்சிக் காலத்தில் தன் பிந்துப் பையில் (Seminal sac) சேர்த்து வைத்திருக்கும் பிந்துக்களினின்று ஒரு பிந்து விடுபட்டு வெளிவருகிற முட்டையுடன் கலக்கும். இவ் விதம் பிந்துச் சேர்க்கை ஏற்பட்ட அண்டங்களி னின்றே ஊழியத் தேனீக்கள் உண்டாகும். சோம்பேறித் தேனீக்களாகும் முட்டைகள் பெரிய அறைகளில் வைக்கப்படும் காலத்தில் பிந்துவின் சேர்க்கை யில்லாமலே வெளிவரும் இவ்விதம் பிந்துச் சேர்க்கை யற்ற அண்டங்களினின்று உண்டாகும் புழுக்களே சோம்பேறித் தேனீயாகின்றன.

அரசித் தேனீக்களாகும் முட்டைகள் பிந்துச் சேர்க்கை ஏற்பட்டே வெளிவரும். முட்டைகள் வெடித்துப் புழுக்கள் வெளிவந்த வுடன் ஊழியத் தேனீக்கள் இந்த அரசித் தேனீப் புழுக்களுக்கு அதிக உணவு கொடுப்பதனுலும், கொடுக்கும் உணவு மற்றப் புழுக்களுக்குக் கொடுப்பதை விட சில விஷயத்தில் மேம்பட் டிருப்பதனுலும் இவ்வுணவை உண்டு வளரும் புழுக்கள் அரசித் தேனீக்களாக மாறுகின்றன வென்று நம்புகிருர்கள்.

குடியேற்றம்.

மேற்கண்டபடி ஒரு கூட்டி லிருக்கும் தேனீக்கள் விருத்தியான வுடனே கூட்டி லிருக்கும் தேனீக்களில் பாதி வேறு இடம் தேடிச் சென்று அங்கே கூடு கட்ட ஏற்பாடு செய்கின்றன. இதற்குக் காரணம் ஒரு கூட்டில் ஒரு அரசித் தேனீக்கு மேல் இருக்கக் கூடாது என்பதே. அப்படியிருக்கும் படி நேரிட்டால் ஒரு அரசித் தேனீ தவிர மற்ற அரசித் தேனீக்களெல்லாம் இறக்கும் அளவு போர் புரியும். இதற்காகவே தாய் அரசித் தேனீ தானிட்ட முட்டைகளி னின்று சில பெண் ணரசித் தேனீக்கள் வெளிவந்த வுடன் தனக்குப் பரிவாரங்களாகப் பல ஊழியத் தேனீக்களை அழைத்துக் கொண்டு பழைய அடையை விட்டகன்று போய் வேறிடம் சென்று ஊழியத் தேனீக்களின் உதவியினால் வேறு புதிய கூடு ஸ்தாபித்து அதில் மறுபடியும் முட்டைகளிடும்.

முதல் குடி யேற்றக் கூட்டம் சென்ற பிற்பாடு பழைய தேனடையில் இரண்டு மூன்று பெண் ணரசித் தேனீக்கள் (Daughter Queen Bee) இருக்கு மாயின் அவைகளுள் மூத்த அரசித் தேனீக்கள் கூட்டம் கூட்டமாகத் தமக்கு வேண்டிய பரிவாரத்துடன் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று புதிய கூடுகளை ஸ்தாபிக்கும். இவ்விதம் முதல் குடியேற்றக் கூட்டம், இரண்டாம் கூட்டம் (Second swarm) மூன்றாம் கூட்டம் என்று பல கூட்டங்கள் பழைய தேனடையை விட்டுச் சென்ற பிற்பாடு பாக்கி யிருப்பது பல ஊழியத் தேனீக்களும் சில சோம்பேறி ஈக்களும், ஒரு சிறு அரசித் தேனீயு மாகும். அரசித் தேனீ ஒரே தடவை அடையை விட்டு வெளியில் பறக்கும். இது மிகவும் முக்கியமான தினம். அன்று ஒரு சோம்பேறித் தேனீயோடு புணர்ந்து தனது பிக்.

துப் பையை நிரப்பிக் கூடு திரும்பும், இனிமேல் கூட்டை விட்டு வெளியில் செல்லாது.

சோம்பேறித் தேனீக்களின் கொலை.

ஊழியத் தேனீக்களுக்குத் தாம் காப்பாற்றிவரும் அரசித் தேனீக்கு கலியாணமாய்விட்டது என்று தெரிந்தவுடன் தமது கூட்டில் உண்டு சுகித்திருக்கும் சோம்பேறித் தேனீக்கள் யாவற்றையும் கொடுக்கினுல் கொட்டிக் கொல்லும். இதற்குக் காரணம் இனிப்பிரயோஜன மில்லாதசோம்பேறிகள் தாம் கஷ்டப்பட்டுச்சேகரித்துவரும்உணவைத் தின்காமலிருப்பதற்கே.

போது.

தேனீக்களை ஐரோப்பா முழுவதிலும் போஷித்து வளர்த்து அடைகளி னின்று வருஷந்தோறும் ஏராளமாகத் தேனெடுத்து வருகிறார்கள். தேனீக்களின் வழக்கம், நடவடிக்கை முதலியவைக ளெல்லாவற்றையும் இவைகளை வைத்து வளர்க்கும் தேனீக்காரர்கள் கண்டு பிடித்தவை யெனலாம். இந்தியத் தேனீக்கள் தம் நடவடிக்கைகளில் பெரும்பாலும் ஐரோப்பியத் தேனீக்களை ஒத்திருக்கும். ஆனுல் ஐரோப்பியத் தேனீக்கள் ஓரிடத்தில் அடை வைத்தால் அதைக் குடியேற்ற காலத்தில் முற்றிலும் துறந்து போகிறதில்லை. ஒரு தேனடையில் தேனீக்கள் அதிகரித்து விட்டால் அதிலிருந்து தக்க காலத்தில் ஒரு தேனீ யரசியும் பாதி ஊழியத் தேனீக்களுமே வெளிச்செல்லு மாதலால் பழைய கூடுகளில் எப்போதும் தேனீக்கள வசித்துவரும்.

இந்தியத் தேனீக்கள் அடையை விட்டு விட்டுப் பல கூட்டங்களாக வெவ்வேறிடம் சென்று கூடு கட்டுவதனுல் அவைகளைப் பழக்கி வருஷந்தோறும் ஒரே யிடத்தில் கூடு கட்டும்படி செய்து போஷிப்பது அசாத்தியமான காரிய மாயிருக்கிறது.

பொதுஜன ஊழியச் சங்கம்.
The Social Service League.

ஸ்ரீமான் K. V. சேஷ ஐயங்காரவர்கள் M.A.B.L.,
ஆங்கிலத்தில் எழுதியதை
ஸ்ரீமான் V. நாராயண ஐயரவர்கள் M.A.B.L.,
மொழிபெயர்த்து எழுதியது.

சென்னைப் பொதுஜன ஊழியச் சங்கம் என்பது சென்ற சில வருஷங்களாய் இந்நகரத்திலுள்ள பொது ஜனங்களின் கஷ்டங்களை நிவிர்த்திக்க முயன்றுவரும் ஒரு சங்கம். தற்கால மனித வாழ்க்கையில் சற்றேனும் கவனம் செலுத்திவரும் எவனுக்கும் அநுவசியமானதும் அணுகவொட்டாமல் தடுக்கக்கூடியதுமான எவ்வளவு கேடுகள் நம்மைச் சுற்றியிருக்கின்றன என்பது நன்கு விளங்கி வியப்பைத்தரும். அநேக ஆண்மக்களும் பெண்மக்களும், இப்பொழுது அவர்கள் இருக்கும் ஸ்திதியில்; ஆரோக்கியமாயும், ஏகதேசம் மரியாதையுடனும் சுமாராய் சாதாரணமாய் வாழ்ந்திருப்பது என்பதற்கே இடமில்லை, மனிதரை இப்படிக் கீழே ஈன ஸ்திதியில் வைத்திருக்கும் தோஷங்களில் சில, அறியாமை ஏழைமை, அநாரோக்கிய வசதி, வியாதி, குடி, அஜாக்கிரதை, சிசுமரணம், சுகாதார மின்மை இவையே. இத்தீங்குகளை ஒருங்கே இப்பொழுதே நீக்கிவிடுவது சாத்தியமல்ல; எனினும் சிலவற்றையேனும் அகற்றுவது கூடுமாகையால் நாமெல்லோரும் இவ்விஷயத்தில் விடாமல் சிரத்தையுடன் விசேஷமாய் முயலவேண்டும். உதாரணமாக, நன்கு நடத்தப்பட்ட முனிசிபல் அதிகாரமுறையில் சுகாதார அநாரோக்கியம்

விளைக்கும் கேடுகள் யாவும் அற்றதாய் வியாதி என்பதே அபூர் வமாக இருக்கவேண்டும். மேலும் நாட்டிலுள்ள ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தங்கள் வாழ்க்கையிலும் தங்களைச் சுற் றிச் சம்பவிக்கும் விருத்தாந்தங்களிலும் புத்தி செலுத்தி ஊக் கமுடன் மனதுவைத்து நடந்துவரும்படியாக, ஒரு மட்டுக்கு படிப்பிக்கப்படவேண்டுமென உரிமைபேசிக் கேட்பது நியாயந் தானே ? வியாதியால் பீடிக்கப்பட்டவர்க்கு மருந்து உதவி முதலிய சௌகரியங்களைச்செய்யும் பொதுஜன சமூகத்தை ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்க பாத்தியம் உண்டு. பொது ஜன கஷ்ட நிஷ்டூரங்களில் சிற்சிலவற்றை அரசாங்கந்தான் சரிவர நிவர்த்திக்க முடியுமென்றாலும்; நல்ல ஸ்திதியில் வாழும் மனிதர்கள் தங்களினும் அதிர்ஷ்டக் குறைவான சகோதரர்களின் துயரத்தை மட்டுப்படுத்த இயன்றவளவு முயலவேண்டியதான தங்களுடைய பாரத்தை இதைச் சாக் கிட்டு குறைத்துக் கொள்ளமுடியாது.

சென்னை பொதுஜன ஊழியச்சங்கங்கள் ஒன்று சேர்ந்து கூடி ஒழுங்காய் வேலை செய்வதால் இத்தீங்குகளில் சிலவற்றை நிவர்த்திக்க முயன்றுவருகிறார்கள். அநேக பாடசாலைகள் வைத்து நடத்தி வருகிறார்கள். சிறுவர்கள் மட்டும் வந்துபடிக் கும் பகற் பள்ளிக்கூடங்கள் தவிர, பகல் முழுதும் வேலை செய்யும் வயதுவந்த தொழிலாளிகள் எழுதப் படிக்கக் கற் றுக் கொள்ளவேணு மென்ற ஆவலுடன் பொழுதுபோன பிறகு பள்ளிக் கூடங்களுக்கு வரும்பொருட்டே ஏற்படுத்தப் பட்ட இராப்பள்ளிக் கூடங்களுக்கு அநேகர் வருகிறார்கள். ஜனங்களுக்கு இனிது அறிவு புகட்டுவதாய் முக்கியமான தோர் வழி எங்கள் “ விநோத விளக்கு ” காட்சிகள். இவற் றை ஜனங்கள் எப்பொழுது வருவனவென்று ஆவலுடன் எதிர்பார்த்து நன்குமதிக்கிறார்கள். ஏழை ஜனங்கள் அடிக்

கடி கடன் படுகிறார்கள் என்பது நம்மெல்லோருக்கும் தெரியும். அவர்கள் ஏன் இப்படிக்கடன் படுகிறார்கள் என்பதை இப்போது ஆராயப்போகிறதில்லை. அவர்களின் அன்றாட அவசியச் செலவுகளுக்கு கடன் வாங்கவேண்டி வராத ஸ்திதியில் அவர்கள் வைக்கப்படவேண்டும். ஆனால், இப்போது அவர்களிற் பெரும்பாலரும் அடிக்கடி அதிகவட்டிக்குக் கடன்வாங்குகிறார்கள். ரூபாய்க்கு மாதத்திற்கு இரண்டணா வீதம் வட்டி கொடுக்கும் எத்தனையோ மனிதரை இச்சங்கத்தவர் கண்டிருக்கிறார்கள். இப்படிக் கடன் வாங்குகிறவர்களுக் கென்று இச்சங்கம், "ஒத்துழைப்புக் கடன் கொடுக்கும் சங்கங்கள்" என்று குறைந்த வட்டியுடன் சுலபமாய்த் திரும்பி கடனையடைக்கத் தவணைகள் ஏற்படுத்தி பணம் கொடுத்து வாங்குவதற்கு ஸ்தாபிக்கிறார்கள். இவ்விதமாய், அநேக பறைச்சேரிகளிலுள்ள கடன்களையெல்லாம் இச்சங்கம் தீர்த்திருக்கின்றது. ஒரு பறைச்சேரி இவ்விதமாய் தங்கள் பணத்தைத் தங்களுக்குள்ளேயே சுலபமான நிபந்தனைகள் ஏற்படுத்திக் கொடுக்கல் வாங்கல் செய்து வந்ததில் 4 வருஷ காலத்துள் 200 ரூபாய்க்கு மேல் இலாபம் கண்டது என்பது இவ்விடத்தில் முக்கியமாய் குறிப்பிடத் தக்கது. இந்த "கடன் கொடுக்கும் சங்கங்களில்" பொதுநன்மைக்கு ஒத்து உழைக்கக் கற்றுக்கொள்ளுவதுடன் பிறர் துயரங்களை மேற்கொண்டு அவர்களின் ஸ்திதியில் பரிதாபமடைந்து அவர்களுக்கு உதவி, தீயகுணங்களை அடக்குவதிலும் நல்லவற்றை முன்னுக்குக் கொண்டுவருவதிலும் ஆசக்தி யுடையவராய் ஒருவருக் கொருவர் பிரயோஜனப்படவும் அறிகிறார்கள்.

மேலும், நமது சங்கம், ஏழை ஜனங்கள் குடியிருக்கும் அநேக கிராமங்களில் மருந்து, வைத்திய உதவி இவைகளுக்கு ஏற்பாடுசெய்யக் கூடியவரை முயன்று வருகின்றது.

யாதுகாரணம் பற்றியோ, இஜ்ஜனங்கள் "முனிஸிபல்" வைத்திய சாலைகளுக்கு போவதில்லை. அங்குபோய் வைத்தியசாலைகளில் இருந்து வைத்தியம் செய்துகொள்ள மிகவும் பயப்படுகிறார்கள். தங்களை அங்கே ஒருவரும் கவனிக்கிறதில்லை என்றும், தங்களின் நோய்கள் சரிவரக் கவனித்துப் பார்க்கப்படுவதில்லை என்றும், மருந்து கிடைப்பதற்கு வெகுநேரம் காத்திருக்கவேண்டி யிருக்கிறது என்றும், வைத்தியசாலைக்குச் சென்றால் அன்றைய தினக் கூலியை இழக்கவேண்டி யிருக்கிறதென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த நமது சங்கம் எப்போது அத்யாவசியமோ அப்பொழுதெல்லாம் அவர்களை வைத்தியசாலைகளுக்குப் போகச்சொல்லி வற்புறுத்துவதுடன் சாதாரணமாய்ச் சுலபமாய்ச் சிகித்சை செய்யக்கூடிய நோய்களுக்கு அவர்க ளிருப்பிடங்களிலேயே மருந்துகொடுத்துதவி வருகிறது. உதாரணமாக, இச்சங்கத்தைச் சார்ந்த சில வைத்தியர்கள் இந்த ஜனங்களைப் போய்ப்பார்த்துச் சொறிசிரங்குகள், மலைசுரம், வயிற்றுக்கடுப்பு முதலிய நோய்களுக்கு மருந்து கொடுக்கிறார்கள். கர்ப்பிணிஸ்திரீகளைப் பிரஸவதினத்திற்கு சில வாரங்களுக்கு முன்னமே, வைத்தியச்சி ஒருத்தி போய்ப்பார்த்துக் கர்ப்பகாலத்தில் எப்படித் தங்களைச் சாக்கிரதையாய்க் காப்பாற்றிக்கொள்ள வேண்டு மென்றும், சர்க்கார் மருத்துவ வைத்தியசாலையில் எவ்வளவுகவலையுடனும் சாக்கிரதையுடனும் பிரசவத்தைக் கவனித்து வைத்தியம் செய்கிறார்கள், என்றும் புத்திமதி சொல்லுகிறாள். இந்த ஸ்திரீகள் இப்படிப் பக்ஷமுடன் வைத்திய சாலையில் கவனிப்பதை உணர்ந்து அவர்களாகவே வைத்தியசாலையை விருப்பத்துடன் நாடுகிறார்கள்என்பது. ஒரு சந்தோஷகரமான விஷயம்.

இன்னும் அநேக விதமாய், பொதுஜன உழைப்பில் உபயோகமான விஷயங்களில் இந்தச்சங்கம் வேலை நடத்து

கிறது. சங்கத்தினரில் சிலர் வைத்திய சாலைகளுக்குச்சென்று நோயாளிகளைக் கண்டு வருகிறார்கள். அங்கே ஒவ்வொரு நோயாளியுடனும் பேசி, உற்சாகப் படுத்தி, அவர்களுக்குப் படிக்கப் புஸ்தகங்கள் கொடுத்துத் தூரதேசத்திலிருக்கிற அவர்களின் பந்துஜனங்களுக்கு அவன் பொருட்டு கடிதங்கள் எழுதி, இன்னும் பலவிதங்களில் வைத்திய சாலைகளில் படுத்துக் கிடக்கிற நோயாளிகளுக்கு பொழுது போக்குவதற்கு உற்சாகத்துடன் தங்கள் துன்பங்களை பொறுத்துக் கொள்வதற்கும் உதவி அவர்கள் அங்கிருக்கும் பொழுதே சௌகரியப் படுத்துகிறார்கள்.

ஜனங்களுக்குக் குடியிருக்கச் சுற்றி பரிசுத்தமாயிருக்கும் நல்ல வசதிகள் ஏற்படுத்தவும் இச்சங்கம் முயன்று வருகிறது. தலைமுறை தத்துவமாய்ப் பழகிவரும் குடிகேடான குடி என்னும் துராப்பியாசத்தினின்றும் அவர்களை மீட்பதற்கும் இச்சங்கத்தினர் வெகுவாகக் கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

மார்டின் லூதர்.

Martin Luther.

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது.

(IV-ம் தொகுதி 117-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ப்ரஷியா (Prussia) தேசத்தைச் சேர்ந்த ஸாக்ஸனி (Saxony) யிலுள்ள எஸ்லிபென் (Eitsleben) என்ற நாட்டில், 1483-ம் வருடம் நவம்பர் மாதம் 10-ந் தேதியில், சுரங்க வேலைக்காரனான (Miner) ஹான்ஸ் லூதர் (Hans Luther) என்றவனுக்கும், தெய்வபக்தியும் பெண்மையும் நிறைந்து விளங்கிய மார்கரெட் (Margaret) என்றவளுக்கும் பிறந்தவர் நமது மார்டின் லூதர்.

இளமைப் பருவத்தில், பற்பல பாடசாலைகளுக்குச் சென்று, கடைசியில், 1501-ம் ஆண்டில், எர்பர்ட்டிலுள்ள (Erfurt) சர்வகலாசாலைக்குப் போய், இவர் பின் பெரிய கீர்த்திமானாகத் திகழ்ந்து விளங்குவாரெனப் பிறர் வியக்துரைக்குமாறு ஊக்கம்-ஊக்கம்-சிரத்தையுடன் கல்வி கற்று, 1502-ம் வருடத்தில், பி. ஏ. பரீக்ஷையிலும் (Bachelor of arts,) 1505-ம் வருடத்தில், அதற்கு மேலான எம். ஏ. பரீக்ஷையிலும் (Master of arts) தேறிப் பட்டம் பெற்று, பின் நியாய நூற்களைப் படித்து வருகையில் திடீரென இவருடைய சிநேகிதர்கள் அதிசயிக்கக் கூடியதும், இவருடைய தந்தை கோபிக்கத் தக்கதுமான செயல் ஒன்றைச் செய்தார். அதாவது, இவ்வுலக வியாபாரத்தைத் துறந்து, மேற் சொல்லிய எர்பர்ட்டிலுள்ள அகஸ்டின் வகுப்பைச் சேர்ந்த மட மொன்றில் (Aug-

ustinian monastery) ஓர் சந்நியாசியாகப் புகுந்தனர். பாபம், புண்ணியம் மேன்மை, கீழ்மை, நன்மை, தீமை, மெய், பொய் முதலானவைகளின் தாரதம்மியங்களை அறியாது, அடக்கமுடியாத வியாகூலத்தினால் கவரப்பட்டு, இதனின்று தெளிந்து மனவமைதி பெறும்பொருட்டு இவர் இங்ஙனஞ் செய்தார்போலும். இயற்கையாகவே, இனிய குண வொழுக்கங்களும், உல்லாசமும் வாயப் பெற்றவரானலும், பல சமயங்களில், தான் ஒரு பெருங் குற்றவாளி யென நம்பி நொந்து, தன்னைக் கடவுள் மன்னித்து ரக்ஷிக்கமாட்டா ரெனவும், தனக்கு உய்வில்லை யெனவும் பாவித்து, சோகக் குட்டையில் படிந்து நெட்டுயிர்த்து மயங்கி வாடித் திரிவாராம். அன்னபானதிகளை யொடுக்கிச் சதாகாலமும் கடவுள் தியானத்திலேயே யழுந்தி, கிறிஸ்த்வமதச் சந்நியாசிகளால் தெரிவிக்கப்பட்ட சடங்குகளைப் பழுதறச் செய்தும் மனமடங்காது வருந்தினர். இச் சமயத்தில், கிறிஸ்துவமதக் கொள்கைகளி லொன்றான "பாபங்கள் எத்தகையவையானலும், ஈசுவர விசுவாசம் மிகுந்தவர்கள் அஞ்சவேண்டியதில்லை. அவருடைய கிருபையினல் அவர்கள் நற்கதி யடைவார்கள்" என்றதை ஆங்கிருந்த முதிய சந்நியாசி ஒருவன் இவர்க்கு உபதேசிக்கவே, இவர் தெளிந்தனராம். உண்மையை யறிய அவாவுகின்றவர்கள் முதலில் பற்பல கஷ்டநஷ்டங்கள்- சஞ்சலம், துக்கம் என்பன வற்றால் தாக்கப்பட்டு அவதிப்படுதல் இயல்பே.

நாளடைவில், அம் மடத்தினரும் அவ் வினத்தோரும் செய்துவந்த அக்கிரமங்களைத் தன் கண்ணால் பார்த்து வெறுப்புற்றார். ஆயினும், தன் மனப் போராட்டங்களையும் வெறுப்பையும் கூடியவரையிலும் அடக்கி, ஆங்கிருந்தவர்களின் நடவடிக்கைகளையே அநுசரித்துவந்தார்.

1507-ம் ஆண்டில், ஒரு புரோகிதராக நியமிக்கப்பட்டார். பின், விட்டென்பெர்க் என்ற நகரத்திற்கு மதக் கோட்பாடுகளைப் போதிப்பதற்காக (Professor of Theology) அனுப்பப்பட்டார்.

1511-1512-ம் வருடங்களில், கிறிஸ்துவர்களின் தலைநகரும், கிறிஸ்துவமதப் பிரதான பாதிரி வசிக்கும் இடமுமான ரோமாபுரிக்குச் சென்று இருந்துவருகையில், இவ்விடத்தில், ஜனங்களின் முன்னேற்றத்திற்காக ஏற்பட்ட பாதிரிமார்களின் நீசகாரியங்களையும் துர்க்குணத்தையும் அவித்தையையும் பார்க்கவே, அவர்கள் மீது இவர்க்கு உண்டாயிருந்த அருவருப்பும் பகைமையும் அதிகரித்தன. 1512-ம் வருடம் விட்டென்பெர்க்குக்குத் திரும்பினர். இது முதல் ரோமன் காதொலிக் மதத்தைக் கைவிடாதபோதிலும், அதன் கொள்கைகளைக் கைவிட்டனர். பவுல் சந்நியாசியால் (St-Paul) இயற்றப்பட்ட "ரோமர்களுக்கான கடிதம்" என்பதைப் பற்றிப் பிரசங்கித்துவருகையில், போப்புகளால் வெளிப்படுத்தப்பட்ட சட்டங்களுக்கும் (Canons) சுவிசேஷத்திற்கும் (Gospel) உள்ள வித்தியாசங்களை எடுத்துரைத்து, அப்பிரதானிகளின் சாதனைகளை நம்பி அவர்களுடைய ஆக்ஞைகளைப் பற்றி நடப்பவர்க்கே உய்வுண்டு என்ற கோட்பாட்டைப் பொய்யெனச் சுட்டிக்காண்பித்து, கடவுள் கிருபையினாலல்லாது வேறெதனாலும் நாம் உய்யமுடியாதெனவும் கடவுளின் மீது திடநம்பிக்கை அத்தியாவசியமானதெனவும் மொழிந்தார்.

அதி உன்னதமான கோவில்களைக் கட்டுவதற்கும், மதப் பிரதானிகள் தங்குவதற்காக ராஜாக்களின் அரண்மனைகளைப் போல உயர்ந்த கட்டடங்களை எழுப்பி அவைகளை லலிதவித்தைகளின் உதவியினால் அலங்கரிப்பதற்கும், சுகபோகங்களை

பூரணமாக அநுபவித்தற்குமான பொருட்செல்வத்தைச் சேமிக்கும் பொருட்டுப் பிரதான பாதிரிகள் 'மன்னிப்புப் பத்திர' மென்றவைகளைப் பிரசுரித்து, பாபிகளான ஆன்மாக்கள் அனைவரும் அவரவர் பாபத்திற்குத்தக்கபடி குறிப்பிட்டிருக்கும் பணத்தைக் கொடுத்து அச்சீட்டுகளை வாங்கினால், அவர்களுடைய பாபம் கழிந்து, அவர்கள் சத்புருஷர்களாவார்களெனவும், இவ்விதஞ் செய்பவர்கள் பாதிரிகளிடஞ் சென்று தம் குற்றங்களை ஒத்து அநுதாபப்பட வேண்டியதில்லையெனவும் பிரசங்கித்து வந்ததாக மேற் கூறினோம். இவ்வாறே, இச் சமயத்தில் பிரதான பாதிரியான பத்தாவது லியோ (Pope Leo X) என்றவன் தன் மாளிகையையும், ரோமாபுரியிலுள்ள பிரதான மாதாகோவிலையும் மிக்க சோர்த்தியாகக் கட்டி முடித்து, பார்ப்பவர் பிரமிக்கும்படி அதிவிநோத சித்திரங்களால் அவ்விடங்களைச் சிங்கரிக்க வேண்டுமெனத் தீர்மானித்து, வழக்கப்படி, உடனே மன்னிப்புப் பத்திரங்களைத் தயாரித்து, அவைகளை விற்றுவரும்படி நூற்றுக் கணக்கான பாதிரிகளை நாடுகள் தோறும் அனுப்பினான். இப் பாதிரிகளிலொருவனான டெட்ஸெல் (Tetzel) என்றவன் ஜெர்மனிக்கு வந்து பிரசங்கித்தான். நூறு, அல்லது ஐம்பது வருடத்திற்கு முன் இவ்விஷயம் நேரிட்டிருந்தால், அத் தேசத்தினர் யாதொரு ஆக்ஷேபமுமில்லாது அப் பத்திரங்களை வாங்கித் தாம் சுசீலர்களாகி விட்டதாகக் கருதி ஆனந்தித்து அமைவுற்றிருந்து விடுவார்கள். ஆனால், இப்பொழுதோ ரூஷ்லின் (Reuchlin,) உல்ரிக் வான் ஹட்டன் (Ulric von Hutten) என்ற கலைஞர்கள் வெளிவந்து அநேக உபந்நியாசங்களாலும் இலக்கியங்களாலும் கிறிஸ்துவ தலைவர்களின் இழிகுணத்தையும் தொழிற்களையும் வெளிப்படுத்தி மெய்ந்நெறியை அறிவித்து வந்தமையால், சாமான்னிய ஜனங்களும்

அச் சீட்டுகளை வாங்கச் சற்றுத் தயங்கினார்கள். மேலும், அக் கொடிய வழக்கத்தை எதிர்த்துப் போராட நமது லூதரும் முன் வந்தார்.

1517-ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ந் தேதியில், 95 காரணங்களுடன் மேற் சொல்லிய மன்னிப்புப் பத்திரங்களை நிராகரித்து ஒரு விளம்பரம் எழுதி, இதை அந் நகரிலுள்ள மாதாகோவிலின் வாசற்படியின்மேல் அறைந்தார். இதைப் படித்தவர்கள் மகிழ்ந்து இவரைத் தம் அதிபதியாக நினைத்துச் சிலாகிக்க வாரம்பித்தார்கள். அவ் விளம்பரத்தில் அடங்கியுள்ளவைகளைச் சுருக்கி எழுதுவோம்: பாபிஷ்டர்களை மன்னித்து நற்கதியடையச் செய்வதற்கான சக்தி கிறிஸ்துவ மதப் பிரதானியிடமில்லை. கடவுளை உறுதியுடன் நம்பி, ஏசுரக்ஷகரின் கொள்கைகளை மனப்பூர்வமாக அநுசரித்து ஒழுகுபவர்களே உய்வார்கள். சிறிதேனும் நன்மை பயக்கக்கூடாத இச் சீட்டுகளை வாங்குவதைவிட ஏழைகளுக்கு வேண்டிய உதவிபுரிதலே மிக்க மேலானது. மெய் யநுதாபமாவது ஒருவன் தன் குற்றங்குறைகளை ஒரு சங்கத்தின் முன்னுவது, அல்லது ஒரு பாதிரி முன்னுவது வெளிப்படுத்துவதல்ல; ஆனால், தான் குற்றஞ் செய்து விட்டதாகத் தெரிந்தவுடன் அதைத் திருத்துவதற்கான மார்க்கத்தை அறிந்து செய்தலேயாம். போலி மதாசாரங்களைப் பின்பற்றுவதினால் விமோசனமில்லை. கடவுள் பக்தியை மெய்யாக உடையவனே உய்வடைவான். கிறிஸ்துவமதப் பாதிரிகளும் பிரதானிகளும் வீணர்கள். விவிலிய நூற்களை ஐயந்திரிபறப் படித்தறிந்து அவைகளைத் திடமாக நம்பி ஒழுகுபவர்களுக்கே மோக்ஷம் சித்திக்கும்.

பிரதான பாதிரி இதை அறிந்தவுடன் அகங்கரித்து, இவரை ரோமாபுரிக்கு வரும்படி உத்தரவு செய்தான். இவர்

இதற்குக் கீழ்ப்படியாமையால், இவருடன் வாதாடி, இவருடைய மூரட்டுத்தனத்தைப் பகிரங்கப்படுத்தி இவரை அடக்கிவரும்படிப் பண்டிதர்களென அழைக்கப்பட்டவர்களில் பலரை இவரிடம் அனுப்பினன். இவ்வழக்குகளில் இவர் வெற்றியடைந்தார். இவரை இனிமேல் கட்டாயப்படுத்தி வெல்ல முடியாதெனக் கண்டு இவர்க்கு வேண்டிய பொருள், பட்டம், உத்தியோகம் முதலானவைகளை இவர் மேல் வருஷிப்பதாக அறிவித்தனன். உடனே, இவர் தான் கடவுளுக்கே அடிமையெனவும், மெய்யே தன் இடைய நண்பனெனவும், அந்தக்கரணத்தின் ஆக்ஞையும் சுவிசேஷங்களுமே தன்னுடைய மேல்வரிச் சட்டங்களெனவும், பணத்திற்காகவும் புகழுக்காகவும் தான் உழைத்து வரவில்லை யெனவும் கூறி மறுத்தார்.

பின் 1520-ம்வருடம் ஜூன் மாதம் 15-ந் தேதியில் இவரைக் கிறிஸ்தவ மதத்தினின்று வெளிப்படுத்திவிட்டதாகப் போப் ஒரு நிருபம் வரைந்து இவர்க்கு அனுப்பினன். இதை இவர் பெற்று, தன் சிநேகிதர்களை வரவழைத்து, இவர் தெருவில் கூடி நெருப்பு மூட்டி, இது கொழுந்துவிட்டு எரிகையில், அந்நிருபத்தை யாவரும் அறியத் துகளாகக் கிழித்து நெருப்பில் எறிந்து எரித்தார்! போப்பினுடைய அடங்காக் கோபமும், நாட்கு நாள் பெருகிவரும் லூதரின் தைரியமும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன. ஐரோப்பிய மன்னவர்கள் திகைப்புற்றனர். கலாவல்லர்கள் சந்தோஷித்தார்கள். ஜனங்களும் அதிசயித்து நின்றார்கள். போப்பை லூதர் எதிர்த்தது சிங்கத்தை எலி எதிர்த்தது போலாயிற்று. எனினும், கடவுள் எலியின் பக்கம் இருப்பின், சிங்கம் எவ்வாறு ஜயிக்கும்?

லூதர் ரோம்புரிக்கு வராவிடினும், சுதேசாதிபதியினாலேயே விசாரிக்கப்பட்டு அத் தேசத்தினின்று நீக்கப்படவேண்டுமென ஜர்மானிய மன்னவனுக்குப் போப் ஒரு கடிதம்

எழுதினான். ஸாக்ஸனியின் அதிபதியால் இவர் பாதுகாக்கப் பட்டு வந்தபடியால், கிறிஸ்துவமதத் தலைவர்கள் இவரைக் கொல்ல முடியவில்லை.

1521-ம் வருடம் ஏப்ரல் மாதத்தில், ஜெர்மானிய மன்னவனை ஐந்தாவது சார்லெஸ் என்றவனால் வரவழைக்கப்பட்டுச் சென்றார். இவருடைய சிநேகிதர்கள் இவரைப் போகக் கூடாதெனத் தடுத்த பொழுது, "அச் சபையின் கூரையிலுள்ள ஓடுகளைவிட அதிகமாக அவ்விடத்தில் பிசாசுகள் நிறைந்திருப்பினும், நான் அவ்விடத்திற்குத் தைரியமாகச் சென்று என் கொள்கைகளின் மெய்யைப் பிரஸ்தாபிப்பேன்." எனக் கூறிச் சென்றார். கடவுள் பக்தியும் உண்மை விசுவாசமும் தீர்ந்து தெளிந்த மனமும் உடைய பெருமக்கள் போப்பையும் அரசனையும் போன்ற மானிடப் பதர்க்குப் பயப்படுவரோ? மேற்கூறிய சபையில் தோன்றியவுடன், அம்மன்னவன் இவரைப் பார்த்து, "இதுகாறும் நாம் பின்பற்றி ஒழுகிவந்த கொள்கைகளைப் பழித்துப் பற்பல பிழைகள் செறிந்த உன் சித்தாந்தங்களைப் பிரசங்கித்து வருதல் தகாது. ஆதலால், உன் போதனைகளின் இழுக்குகளை நீ ஒத்துக் கொண்டு அவைகளை இனி நீ வற்புறுத்துவதில்லை யென வாக்களிப்பாயானால், உன்னை யாம் விடுப்போம்,' எனக் கூறியதைக் கேட்டலூதர் "என்னுடைய மொழிகள் இழுக்குள்ளவை யெனவும், என்னுடைய குண நடத்தைகள் இகழத்தக்கவை யெனவும் சாதித்தல் மாத்திரம் போதாது. தக்க சாதனங்களுடன் அச் சாதனைகளை நிரூபிக்கவேண்டும். என்னுடைய அந்தக்கரணமும் விவிலிய நூற்களுமே என் சாதனங்கள். என் போதனைகளின் உண்மையையும் சிறப்பையையும் அவ்விரண்டும் வலியுறுத்துகின்றன," என விடையளித்தார்.

பின், போப்பின் பிரதிநிதிகள் இவரைக் கொலை செய்து விடவேண்டுமெனச் சதியாலோசனை செய்ததையும்; இதை மேற்சொல்லிய சாக்ஸனியின் அதிபதி கேள்வியுற்றவுடன், தன் பட்டாளரில் சிலரை அழைத்து லூதர் இருக்குமிடம் சென்று அவரை எவ்விதத்திலாயினும் காப்பாற்றிக் கொணர்ந்து தன் கோட்டைகளொன்றில் இரகஸ்யமாய் அடைத்து வைக்கும்படி ஆக்ஞாபித்து அனுப்பியதையும்; இது செய்யப்பட்டதையும்; இவர் இரகசியமாயிருந்து வருகையில், தன் மதக்கொள்கைகளைப் பற்றிப் பல கடிதங்களையும் புத்தகங்களையும் எழுதி, தன் சிநேகிதர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் அனுப்பிவந்ததையும்; இவருடைய கொள்கைகளும் மதமும் பரவி வந்ததையும்; இச் சமயத்தில், ஜெர்மானிய விவசாயிகளும் எளியர்களும் பற்பல காரணங்களையிட்டுக் கலகமெழுப்பியதையும்; இக் கலகக்காரர்கள் மிகக் குரூரமாக நடத்தப்பட்டு அடங்கியதையும்; லூதருடைய இருப்பும், இவருடைய மதக் கொள்கைகளுமே அக் கலகங்களுக்குக் காரணமென இவருடைய விரோதிகள் கொண்டு இவர் வகுப்பினரைத் துன்புறுத்தியதையும்; பின் காதொலிக் மதத்தினரும் தம்முடைய கொள்கைகளையும், ஆசாரங்களையும், குணநடத்தைகளையும் செம்மைப்படுத்த வேண்டுமென நிருணயித்து, சங்கங்கள் கூட்டுவித்து ஆலோசித்ததையும்; 1525-ம் வருடம் ஜூன் மாதத்தில் காதெரைன் வான் போரா (Catherine von Bora) என்ற பெண்சந்நியாசினியை (Nun) லூதர் மணந்து இனிது இல்லறம் நடத்தியதையும்; இதினின்று உண்டான குழப்பங்களையும் விரிவஞ்சி விஸ்தரிக்காது விடுத்தனம்.

1546-ம் வருடம் பிப்ரவரி மாதம் 18-ந் தேதியில், லூதர் இப் புவியினின்று நீங்கினார்.

கொள்கைகள்:—விசுவாசம் இன்றியமையாதது. இது வரையிலும், கிறிஸ்துவ மதப்பிரதானிகள் தம்மால் தெரிவிக்கப்பட்ட கோட்பாடுகளையும் விதிக்கப்பட்ட ஆசாரங்களையும் ஒவ்வொரு கிறிஸ்துவனும் ஆராய்ந்தறிய முடியாது,கண்மூடித்தனமாய் நம்பிச் செய்துவரவேண்டுமெனப் புகட்டிவந்தார்கள். இதற்கு எதிராக நமது லூதர் பின் வருமாறு செப்பியிருக்கின்றார். இவ்வுலகம் உலகாதிகளின் அமைப்பையும் போக்கையும் ஒவ்வொருவனும் தீர விசாரித்தறிந்து, உண்மை வழிகளைத் தேடித் தருவிப்பார்த்துப் பின்பற்றுதலே மேலானது.தீர்ந்த தெளிந்த ஞானத்தினால் ஆன்மாவின் சிறப்பையும் ஆன்மாவுக்கும் ஜகதீசனுக்குமுள்ள இணக்கத்தையும் அறிய வேண்டும். நற்செய்கைகளாலும், ஆராதனைகளாலும், நானாவித ஆசாரங்களாலும் மாத்திரம் பாபிஷ்டர் சுசிலராக முடியாது. நாம் இயற்கையாக நல்லோர்களாயினும், மௌட்டியத்தினால் நாம் இவ் விழிய நிலைமையிலிருந்து இடருற்று வருந்துகின்றோம். இனி நமக்கு இயல்பான மகத்துவத்தைப் பெற்றுப் பெரியோராவோம். இவ்விதஞ் செய்ய நமக்குக் கடவுள் கைகொடுத்து உதவுவரென்ற நம்பிக்கை மிகப் பிரதானமானது. இதனுடன் நற்சிந்தனை சொல் செயற்களும் கூடுமாயின் நாம் நற்கதியை அடையலாம். நன்மை, தூய்மை, வாய்மை, கடவுளாகியவைகளை முழு மனதுடன் நம்பாமையே பெரும் பாபம், நாஸ்திகம். இவைகளினின்றுதான் பற்பல கொடூரங்கள் முளைத்து மேலோங்கி வளர்கின்றன. முதலிற் கூறியவற்றின் மீது விசுவாசமில்லாது, ஒருவனும் நன்மையை மேற்கொண்டு உழைக்க முடியாது. அல்லது, உழைப்பினும், அதற்குத் தக்க பலன் கிடைக்காது.

ஏசு கிறிஸ்துவின் புனித குணநடத்தைகளையும், விவில்ய நூற்களின் பெருமையையும் முற்றும் நம்பியவர். மாதா

கோவில்களும் இதன் பரிவாரங்களும் மாநதரின் முதிர்ச்சிக்கு மிக்க அவசியமானவை யல்லனவெனக் கொண்டவர். விக்ரஹாராதனையும், நிஷ்ப்ரயோஜன கருமங்களும் மூடபக்தியின் மக்கள். மூடபக்திக்கு வினை நிலமாகவுள்ளது அவிவேகம். மடங்களும், மதச் சங்கங்களும் ராஜ்யாதிபதிகளுக்கு அடங்கி நடக்கவேண்டும். மத விஷயங்களில் சுதந்தரம் பெரிதெனப் பன்முறை ஓதிய போதிலும், ராஜாங்கத்தை ஒட்டியவைகளை எதிர்த்து மன்றாடக் கூடா தெனக் கொண்டவர். ஆகவினுற்றான், முன்கூறியபடி எளியர் கலகமெழுப்பியபொழுது, இவர் அன்பு, இரக்கம், சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம் முதலானவைகளைக் கைக்கொண்டவராயினும், அம் மூடர்கள் ராஜாங்கத்தை எதிர்த்துப் போராடியதால், அவர்களை எவ்விதத்திலாயினும் அடக்கவேண்டு மென முறை யிட்டார். கல்வி அவசியமானதெனக் கொண்டவராயினும், ஞானிகளைப் போலும் தற்காலத்திய பிரகிருதி சாஸ்திரிகளைப் போலும் எவ் விதத்தட்டுத் தடையு மில்லாது நம் மனங்களை நாலா பக்கங்களிலும் எல்லா வஸ்துக்களிலுஞ் செலுத்தி உண்மை அறியவேண்டு மென்றதை நம்பியவ ரல்ல. பேய், பிசாசுமுதலான அப்ராகிருதத் தோற்றங்களில்(Preternatural phenomena) கொஞ்சம் நம்பிக்கை உடையவர்.

குணாதிசயங்கள் :— பொய்யை வெறுத்தவர், பொருட் செல்வத்தை இச்சித்தவ ரல்ல. சகவாச குணமும், தயாள சிந்தையும், ஆண்மையும், பொறுமையும், நன்னம்பிக்கையும் நிரம்பியவர். மத விஷயங்களில் பிரவிர்த்தித்து உழைத்தவர். கலியாணஞ் செய்துகொண்டது இகழத்தக்க தெனச் சிலர் கூறலாம். இவர் மணஞ் செய்துகொண்டது பாசத்தினு லல்ல. இப் பாசம் நிரம்பிய பிராயம் கழிந்த பின்னரே இவர் விவாகஞ் செய்துகொண்டார் செல்வத்தைக் கருதியு மல்ல. இவருடைய மனைவியோ எததகைய ஆதரவுமிலலாது பர விஷயங்களிலேயே தன் மனதைத் திருப்பி இருந்த ஓர் ஏழைப் பெண் சந்நியாசி. இதற்குக் காரணம் யாதெனில், மணஞ் செய்துகொள்ளக் கூடா தெனப் போதித்த

காதொலிக் வகுப்பினரை எதிர்த்து நடக்க வேண்டு மென்றது ஒன்று. இவ் வகுப்பினரில் பெரும்பான்மையரும் மணந்து கொள்ளாது காமக்குரோதாதிகளில் அகப்பட்டு அழிந்தனர். ஆதலால், அவ் விதஞ் செய்வதைவிட ஒரே ஸ்திரீயை விவாகித்து இனித்திருப்பதே உத்தமமான தென்பதை யாவரும் எளிதில் அறியும்படிக்குச் செய்தது மற்றொன்று. பணிவும் பக்தியும் பொருந்திய நாயகியுடன் வசித்தலைவிடப் பெரிது ஒன்று மில்லை யெனவும், அத் தகையள் இருக்கும் இல்லம் சிறப்புற்ற தெனவும் இவர் பன்முறை புகழ்ந்திருக்கிறார். சிறுவர் சிறுமிகளுடன் மிக்க அன்போடு பழகியவர். அவர்களை நிந்தித்துப் பயமுறுத்தி அடிக்கக்கூடா தென இடைவிடாது வெளியிட்டு வந்தவர். தளராத ஊக்கமும் உழைப்பும் வாயப் பெற்றவர்.

பதினாறுவது நூற்றாண்டின் ஏகசக்கிராதிபத்தியத்திற்கும் (Autocracy) இக் காலத்தில் வழங்கும் பொது ஜனவர சாட்சிக்கும் மூலாதாரமானவர் லூதரே. இராஸ்மஸ், லூதர், என்ற இவ் இருவரிடமிருந்துதான் பழங்கிக்கிடந்த தத்துவ ஞானமும் மெய்ம் மதமும் வெளித்தோன்றி ஐரோப்பாக் கண்டம் முழுதும் பரவி அக் கண்டத்தினரை ஒப்புயர்வில்லாத நாகரீகர்களாக மாற்றின.

இவ் வகுப்பினர் எதிர்மதவாதிகளெனவும் இவருடைய மதமே எதிர்வாதம் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றன. ஐரோப்பிய சரிதத்தில், சீர்திருத்தக்காலம் (Reformation) என்பது இவரிடமிருந்துதான் தொடங்குகின்றது.

இம் மகான்களைப்பற்றி வாசித்தறிகையில், புராதன மேன்மையையும், தூய்மையையும் இழந்து நிலை தடுமாறிய நமது ஹிந்து மதத்தைச் சரியான நிலைமையில் நிறுத்தும்படி உழைத்த பெருமான்களான தயானந்த சரஸ்வதி, ராஜா ராம் மோஹன்ராய், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் என்றவர்களின் நல்லுழைப்பும் நற்போதனைகளும் நம்முடைய ஞாபகத்திற்கு வருகின்றன.